# தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட கல்வி மீளாய்வுக் கூட்டம் கலெக்டர் யா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,நவ.23-**

தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் கலெக்டர் யா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் மாவட்ட கல்வி மீளாய்வுக் கூட்டம் கல்வித்துறை அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் தலைமையாசிரியர்களிடம் பள்ளிகளின் செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து *(22.11.2024)* ஆய்வு நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டு உட்கட்டமைப்பு வசதிகள், மாணவர் சேர்க்கை, பள்ளி மேலாண்மைக் குழு, பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி, பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான கணக்கெடுப்பு விவரம், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள், உயர் கல்வி வழிகாட்டி, *HI-TECH LAB*, நூலக பயன்பாடு, மாணவர்களின் போதைப் பழக்கம் பயன்பாடு குறித்து கண்காணித்தல் தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டது. மேலும், நலத்திட்டங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் சார்ந்தும் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , உதவி கலெக்டர் பயிற்சி உத்கர்ஷ்குமார், இ.ஆ.ப முதன்மைக் கல்வி அலுவலர் இரா. அண்ணாதுரை மற்றும் கல்வித் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் இளம் வாக்காளர்களை சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

## கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,நவ.23-**

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதற்கான சிறப்பு முகாம் மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் *(22.11.2024)* தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான படிவம் வழங்கப்பட்டு, வாக்காளர் சேவைக்கான செயலி மூலம் தங்கள் தகவல்களை பதிவு செய்து, வாக்காளர்களாக தங்கள் பெயரை, வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான விளக்கங்களும், செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மேலும். இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வோட்டர்ஸ் ஹெல்ப்லைன் செயலி மூலம் வாக்காளர்களாக பதிவு செய்தல் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு காணொளி மாணவ, மாணவியர்களுக்கு திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்தியத் தேர்தல் ஆணையம் *01.01.2025* ஆம் நாளை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகளுக்காக *29.10.2024* முதல் *28.11.2024* வரை சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியது. அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பு சுருக்கத் திருத்த முகாம்கள் நடைபெற்று வருகின்றது.

இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக கல்லூரிகளில் இது போன்ற சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றது. இதுவரை வாக்காளர்களாக பதிவு செய்யாத மாணவ, மாணவியர்கள் தேர்தல் ஆணையத்தின் வோட்டர்ஸ் ஹெல்ப்லைன் செயலியை ஸ்மார்ட் போனில் பதிவிறக்கம் செய்து, அதன் வாயிலாக தங்கள் விவரத்தினை பதிவு செய்து தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்திய சான்றிதழ்களை உள்ளீடு செய்து, வாக்காளர்களாக தங்களை பதிவு செய்து கொள்ளலாம். ஜனவரி *2007* மற்றும் அதற்கு முன்னதாக பிறந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்காக படிவம் 6 பூர்த்தி செய்து வழங்கலாம். *18* வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்கள் பெண்கள் என ஒவ்வொருவருக்கும் வாக்களிப்பது என்பது ஜனநாயக கடமை ஆகும். நமது வாக்கு விலை மதிப்பற்றது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

கல்லூரி மாணவ,மாணவியர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை இணைத்துக் கொள்வதன் மூலமாக தான் இந்தியாவின் குடிமகனாகவும் வாக்காளர்களாகவும் திகழ முடியும். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்புமிக்க பணி உங்களிடம் உள்ளது, அனைத்து தேர்தலிலும், வாக்காளர்களாக பதிவு செய்துள்ள மாணவர்கள் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமையினை ஆற்ற வேண்டும். தகுதியுடைய எவரும் வாக்களிக்காமல் இருந்து விடக்கூடாது. எனவே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு மாணவர்கள் அனைவரும் படிவம் 6 பூர்த்தி செய்து தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் இணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இம்முகாமில் பங்கேற்ற *2,500*க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் படிவம் 6ஐ பூர்த்தி செய்து வழங்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ச.வைத்தியநாதன், தேர்தல் வட்டாட்சியர் அருளானந்தம், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவ,மாணவியர்கள் மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசின் உயர் கல்வி துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களால் நாங்கள் தங்கு தடையின்றி கல்வி பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது

## புதுக்கோட்டை மாவட்ட நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாணவ,மாணவிகள் நெஞ்சார்ந்த நன்றி

**புதுக்கோட்டை,நவ.23-**

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

-திருக்குறள்.



ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க முதலமைச்சர் கல்வித்துறையில் புரட்சியை வகையிலான பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்கள் தான் தமிழகத்தின் எதிர்காலம், கல்வியின் திறமையால் வருங்கால தமிழகம் வெற்றி நடைபோட வேண்டும் என்னும் நோக்கில் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்றால் அனைவரும் கட்டாயம் அடிப்படைக் கல்வி மற்றும் உயர்கல்வி பயில வேண்டும் எனவே பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தில் என மாணவ, மாணவர்களின் வளர்ச்சிக்காக பள்ளிகல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக கல்வி வளர்ச்சியில் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு எடுக்கும் முயற்சியால் பார் போற்றும் புகழை தமிழகம் பெற்றுள்ளது என்பது சிறப்பாகும். அந்த வகையில், கிராமப்புற மாணவியர்கள் உயர் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.*1000* உதவித் தொகை, தமிழ்நாடு மாணவர்கள் தரணியை வென்றிட தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.*1000* உதவித்தொகை, நான் முதல்வன் திட்டம், கிராமப்புற மாணவர்கள் உயர் கல்வி பயில *7.5* சதவீத இட ஒதுக்கீடு உள்ளிட்ட கல்வித்துறையில் சிகரம் பெறும் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒரு காலத்தில் குறிப்பிட்டவர்கள் மட்டுமே கல்வி கற்க முடியும் என்பதை மாற்றி, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களும், மருத்துவம், பொறியியல், சட்டம், செவிலியர், மருந்தாளுநர் போன்ற பல்வேறு உயர்கல்வி பயின்றிட கல்விச் செலவிற்காக, மாவட்டந்தோறும் வங்கிகள் வாயிலாக மாபெரும் கல்விக் கடன் முகாம் நடத்திட வேண்டும் என உத்தரவிட்டு அதனையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி பயின்று வாழ்வில் முன்னேற்றம் அடையும் வகையில் பல திட்டங்களை முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருவது கல்வித்துறையின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது.

மாணவர்களின் உயர்கல்விக்கு கல்வி கடன் வழங்கும் திட்டம் குறித்து கலெக்டர் தெரிவித்ததாவது: முதலமைச்சர் மாணாக்கர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் ஏழை, எளிய மாணாக்கர்களின் உயர்கல்வி கனவினை நிறைவேற்றிடும் வகையில், மாபெரும் கல்விக் கடன் முகாம் நடத்தி அதன் மூலம் எளிதாக மாணவர்கள் கல்வி கடன் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுதினார்கள். அதன்படி *12* ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு பட்டப்படிப்பு படிப்பதற்கும், கல்லூரிகளில் முதலாம் ஆண்டு முதல் நான்காம் ஆண்டு வரை படித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், முதுநிலை கல்வி படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கர்களுக்கும் கல்வி கடன் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளின் மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பயிற்சி கல்லூரி, நர்சிங் கல்லூரிகளை சேர்ந்த மாணாக்கர் இத்தகைய முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர்), பான் கார்டு, *10, 11, 12*ஆம் வகுப்பு மதிப்பெண் சான்று, மாற்று சான்றிதழ் வருமானச் சான்று, சாதிச் சான்று, இருப்பிடச் சான்று, கல்லூரி கட்டணங்களுக்கான சான்று ஆகிய ஆவணங்களின் நகல்களுடன் இத்தகைய கல்வி கடன்முகாம்களில்; கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் தமிழக அரசின் இதுபோன்ற திட்டங்களை மாணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, மாணாக்கர்கள் உயர்கல்வியினை தொடர்ந்து பயின்று, வாழ்க்கையில் உயர்ந்த நிலையினை அடைந்திட வேண்டும் என கலெக்டர் மு.அருணா, தெரிவித்துள்ளார்.



கல்வி கடன் வழங்கும் முகாமில் கலந்து கொண்டு கடனுதவித் தொகைக்கான ஆணையினை பெற்றுக்கொண்ட திருவரங்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஆஷிபா என்பவர் தெரிவித்ததாவது: என் பெயர் ஆஷிபா. எனது தந்தை பெயர் முகமது ரம்ஜான், தயார் ரகுமத் நிஷா. நான் திருவரங்குளத்தில் எனது தாய், தந்தையருடன் வசித்து வருகிறேன்இ ஆமலும் நான் தனியார் கல்லூரியில இளங்கலை (கணினி) இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறேன். நான் என்னுடைய மேல்நிலை கல்வியை திருவரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் முடித்தேன். என்னுடைய தந்தை ஒரு பெட்ரோல் பங்கில் தினக்கூலியாக வேலை செய்து வருகிறார். அவருக்கு கிடைக்கும் குறைந்த வருமானத்தை வைத்து எங்களுடைய குடும்பத்தை நடத்து என்பதே மிகச்சிரமமாக இருந்தது. இந்நிலையில் என்னுடைய மேல் படிப்பு என்பது கனவாக போய்விடுமோ என்று எண்ணி இருந்தேன். இருந்த போதிலும் என் பெற்றோர் கள் மிகுந்த சிரமத்திலும்; உயர் கல்வி பயில என்னை அருகில் உள்ள தனியார் கல்லூரியில் சேர்த்து விட்டனர். எங்கள் குடும்பத்தின் வறுமை நிலையை அறிந்து, நல்ல முறையில் கல்வி கற்று வருகிறேன். இருந்த போதிலும் எங்கள் குடும்பத்தின் வறுமை நிலை எனக்கு மன கஷ்டத்தையும், பணக்கஷ்டத்தையும் அளித்து வந்தது. கல்லூரிக்கான கல்விக் கட்டணம் செலுத்துவது, தேர்வுக்கட்டணம் செலுத்துவது போன்ற காலங்களில் மிக கஷ்டமான சூழ்நிலை வரும் ஏதாவது பண உதவி கிடைக்குமா என எண்ணியிருந்தேன். இத்தகைய சூழ்நிலையில் மாணவர்களின் கல்விக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உயர்கல்விக்காக கல்வி கடன் வழங்கும் திட்டம் குறித்து செய்தித்தாள்களில் வெளிவந்த செய்தி பார்த்து தெரிந்து கொண்டேன். மேலும் மாணவர்கள் கல்வி கடனுக்காக வங்கிகளை தேடிச்செல்லாமல். மாணவர்களை தேடி வங்கிகலே நேரடியாக கல்வி கடன் வழங்குவதற்காக கல்விக்கடன் முகாம் நடைபெறுவது குறித்து சமூக ஊடகத்திலும், செய்திதாள்கள் மூலம் தெரிந்துகொண்டு உரிய ஆவணங்களுடன் கல்வி கடன் முகாமில் கலந்து கொண்டேன். முகாமில் பல்வேறு வங்கிகள் கலந்து கொண்டு அதில் எனக்கு ஏற்ற வங்கி ஒன்றில் விண்ணப்பித்தேன். விண்ணபத்த உடனே என்னுடைய விண்ணப்பத்தை பரிசீலனை செய்து அன்றைய தினமே; கல்வி கடன் எதவித் தொகைக்கான ஆணையினை வழங்கினார்கள். இந்த கடனுதவித் தொகை நான் உயர்கல்வியினை தடையின்றி பெற பேருதவியாக அமையும். எங்களை போன்ற அடித்தட்டு மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேன்மையடையும் வகையில் இது போன்ற முகாம்கள் மூலம் கடனுதவி வழங்கிட வழிவகை செய்து மாணவர்கள் கல்வி கற்பதற்கு கலங்கரை விளக்கமாக விளங்கிடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், எனது குடும்பத்தினர் சார்பிலும் மேலும் என்னை போன்ற மாணவ, மாணவிகள் சார்பிலும் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.¬¬¬



**தொகுப்பு**

**க.பிரேமலதா,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**

**புதுக்கோட்டை மாவட்டம்**

# உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் கலெக்டர் தி.சாரு ஸ்ரீ முகாமிட்டு கள ஆய்வு



**திருவாரூர்,நவ.23-**

மக்களை நாடி, மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் ஒவ்வொரு மாதமும், ஒரு வருவாய் வட்டத்தில் நடைபெற வேண்டும் என்பதன் அடிப்படையில் இன்றைய தினம், திருவாரூர் மாவட்டத்தில் *2024* நவம்பர் மாதத்திற்கான முகாம் நீடாமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் *21-11-2024* காலை *9.00* மணி முதல் *22-11-2024* காலை *9.00* மணி வரை நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டதுடன், அனைத்து அரசு துறை உயர் அலுவலர்களும் வருவாய் வட்டத்தில் கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளை கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி தகுதியான மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்யும் பொருட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், கலெக்டர், நீடாமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் முகாமிட்டு, தமிழ்நாடு முதலமைச்சரின் உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், நீடாமங்கலம் முதல் நிலை பேரூராட்சி அலுவலத்தில் தூய்மை பணியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார். நீடாமங்கலம் பேரூராட்சி அலுவலகம் அருகிலுள்ள *3,50,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதையும் உறுதி செய்து, நீடாமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ அறை, செவிலியர் அறை, குழந்தைகள் நல பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, மருந்தகம், ஆய்வுக்கூடம், ஆண்கள் மருத்துவ பிரிவு, பெண்கள் மருத்துவ பிரிவு என அனைத்து பிரிவுகளையும் கலெக்டர் பார்வையிட்டு, மருந்துகளின் இருப்பு விவரம் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து, ரூ.*381.82* இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுவரும் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தினையும், நீடாமங்கலம் டி.5 காவல் நிலையத்தில் பதியப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் காவல் நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகள் குறித்தும் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் *(2023-2024)*ன் கீழ் ரூ.*25* லட்சம் மதிப்பீட்டில், பழைய நீடாமங்கலம், ஆதிதிராவிடர் தெருவில் *60,000* லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி புதியதாக கட்டப்பட்டுவருவதையும், கோவில்வெண்ணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் கலெக்டர் தி.சாருஸ்ரீ, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ்ஆய்வில், நீடாமங்கலம் வட்டாட்சியர் தேவகி, ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்செல்வன், பேரூராட்சித்தலைவர் ராமராஜ், செயல் அலுவலர் கலியபெருமாள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயலெட்சுமி, முத்துகுமரன், கோவில் வெண்ணி ஊராட்சி மன்றத்தலைவர் மாலதி பாஸ்கர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# நெப்புகை ஊராட்சிக்கு சுகாதார கிராமத்திற்கான தேசிய விருது

## முன்னாள் இயக்குனர் ரவி பட் நாயக்கர் வழங்கினார்



**புதுக்கோட்டை,நவ.23-**

கந்தர்வகோட்டை அருகே நெப்புகை ஊராட்சிக்கு *200* வது சுகாதார கிராமத்திற்கு டெல்லியில் மத்திய அரசால் நெப்புகை ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகத்திற்கு தேசிய விருது வழங்கப்பட்டது புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே நெப்புகைஊராட்சி முள்ளிக்காப்பட்டிகிராமத்தில் மாதவிடாய் கழிவுகள் இல்லாத *200* வது சுகாதார கிராமத்திற்கு தேசிய விருது டெல்லியில் நவம்பர் *19* உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு நான்காவது உச்சி மாநாட்டில் *G 20* மண்டபம் பாரத் மஹாலில் முன்னாள் இயக்குனர் ரவி பட் நாயக்கர் வழங்கினார் நெப்புகை ஊராட்சிக்கு உட்பட்ட குக்கிராமகத்திற்கு கிராமாலயா உதவியோடு *250* குழியல் அறையுடன் கூடிய நவீன கழிப்பறை கட்டமைப்புக்கு பத்ம ஸ்ரீ தாமோதரன்ஏற்பாட்டில் தலைவர் எஸ் ஆறுமுகத்திற்கு வழங்கப்பட்டது நிகழ்வில் கிராமாலயா பார்வதி*BCO*ஆகியோர் உள்ளனர்

# பெரம்பலூரில் ஸ்ரீ தலையாட்டி சித்தர் திருகோயிலில் 39ம் ஆண்டு குருபூஜை

பெரம்பலூர் நவ *23*

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வடபுறம் அருள் பாலித்து வரும் ஸ்ரீ தலையாட்டி சித்தர் திரு கோயிலில் *39*ஆம் ஆண்டு குரு பூஜை விழா கோலாகாலமாக கொண்டாடபட்டது. இதில் காலை *6* மணி முதல் *7* மணிக்குள் குருவின் குரு ஸ்ரீ ல ஸ்ரீமா காலிங்க சுவாமிகளுக்கு அபிஷேகமும் *210* சித்தர்களின் யாக பூஜைகளும் தீப ஆராதனையும் நடைபெற்றது அதனை தொடர்ந்து காலை *1 1* மணியளவில் காவல் தெய்வங்கள் ஐயனார் , வக்கனை யார் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. அதனை தொடர்ந்து *12* மணியளவில் *210* சித்தர் களின் யாக பூஜையும் வண்ண மலர்கலாள் அலங்காரமும், வஸ்திரதானமும், அன்னதானமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருச்சியை சேர்ந்த வேலு தேவர் ஐயா, அறங்காவலர் கண்ணபிரன்,, சிவபாண்டியன் எல்.ஐ சி . அசோகன், ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை வே.காமராஜ், வே.நந்தேஸ்வரன், வே.சக்திஸ்வரன் ஸ்ரீலஸ்ரீ தலையாட்டி சித்தர் ஆசிரம நிர்வாகிகள் செய்து இருந்தனர்.

# திருவாரூரில் நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் புத்தக கண்காட்சி மாவட்ட எஸ்.பி.ஜெயக்குமார் திறந்து வைத்தார்



**திருவாரூர்,நவ.23-**

திருவாரூரில் நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்யின் *10*ம் ஆண்டு மாபெரும் புத்தக கண்காட்சியினை நாகை எம்.பி வை.செல்வராஜ் தலைமையில் மாவட்ட எஸ்.பி.ஜெயக்குமார் திறந்து வைத்து முதல் புத்தக விற்பனையும் தொடங்கிவைத்தார்.

அப்போது எஸ்.பி பேசுகையில் தற்போது கைபேசிகளை பெருமளவில் பயன்படுத்தும் சூழ்நிலையில் படிக்கும் பழக்கமானது வெகுவாக குறைந்து வருகிறது. இதனை தடுக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வந்தாலும் இது போன்ற எங்கு கிடைக்காத புத்தக கொண்டு மக்கள் இடத்திற்கே கொண்டு செல்லும் வகையில் மாபெரும் புத்தக கண்காட்சியினை நடத்தினால் மட்டுமே முடியும்.

எனவே பள்ளி ஆசிரியர்கள் மாணவ,மாணவிகளிடம் எடுத்து கூறி புத்தகண்காட்சியில் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில் ஆர்.டி.ஒ சௌம்யா,நகர மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா,தமிழ்நாடு விவசாய சங்கம் பி.எஸ்.மாசிலாமணி,வேலுடையார் பள்ளி தலையாசிரியர் அகிலன் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள்,பள்ளி தாளாளர்கள், தலைமையாசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் சுரேஷ் நன்றி தெரிவித்தார்.



திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் அம்மாபேட்டை ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.

# பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதிமேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.1.38 கோடி மதிப்பில் பல்வேறு திட்ட பணிகள்

## கே.என்.அருண் எம்.பி. நேரு தொடங்கி வைத்தார்



**பெரம்பலூர்,நவ.23-**

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வடக்கு மாதவி, வெங்கலம், அரும்பாவூர், வ.களத்தூர் ஆகிய பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு மாவட்ட கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் வடக்கு மாதவி அரசு உயர்நிலைப் பள்ளி, வெங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி, வி.களத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் தலா ரூ.7.85 லட்சம் மதிப்பீட்டில் மாணவிகளுக்கான கழிவறை கட்டும் பணிகளையும், மூலதன மானிய நிதியின் மூலம் அரும்பாவூர் பேரூராட்சி அலுவலகத்திற்கு ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணியினையும் என மொத்தம் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் 4 புதிய திட்டப்பணிகளுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, அரும்பாவூர் பேரூராட்சியில் மாநில நிதிக்குழு திட்டத்தில் ரூ.140.50 இலட்சம் மதிப்பீட்டில் அ.மேட்டூர் வார்டு எண்.15, விஜயபுரம் தார் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளையும, வார்டு எண்.14, மாரியம்மன் கோவில் தெருவில் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் 3) அரும்பாவூர் வார்டு எண்.5, பெரியாண்டவர் கோவில் தெரு தார்சாலை மற்றும் வடிகால் அமைத்தல் உள்ளிட்ட பணிகைளையும் தெடங்கி வைத்தார். மேலும், பணிகளை உடனடியாக தொடங்கி உரிய காலத்திற்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மீனா அண்ணாதுரை, அட்மா தலைவர் ஜெகதீசன், பேரூராட்சிகள் துறை துணை இயக்குநர் .காளியப்பன், அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை இரவிச்சந்திரன், செயல் அலுவலர் தியாகராஜன், தொடக்க கல்வி அலுவலர் செல்வகுமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பாஸ்கர், மகாதேவி ஜெயபால், வட்டாட்சியர்கள் சரவணன் (பெரம்பலூர்), மாயகிருஷ்ணன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டம் விளந்திடசமுத்திரம் மற்றும் சட்டநாதபுரம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் குடியிருப்பு வீடுகளின் பயனாளிகள்

## நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி



**மயிலாடுதுறை,நவ.23-**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாரம் விளந்திடசமுத்திரம் மற்றும் சட்டநாதபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் ஊரக வீடுகள் பழுது பார்ப்பு திட்டம் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் குடியிருப்பு வீடுகளை "நிறைந்தது மனம் திட்டத்தின் வாயிலாக மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு, பயனாளிகளுடன் கலந்துரையாடி, தமிழ்நாடு அரசின் திட்டத்தின் பயன்கள் குறித்து கேட்டறிந்தார்கள்.

சீர்காழி வட்டாரம், விளந்திடசமுத்திரம் கீழத் தெருவில் ஊரக வளர்ச்சி துறையின் ஊரக வீடுகள் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் பயனாளி ராதிகா அவர்களது ஓட்டு வீடு ரூ.70 ஆயிரம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்பட்டு வருவதை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, பணிகள் தொடங்கப்பட்ட காலம் மற்றும் இதுவரை வழங்கப்பட்ட தவணைத் தொகை குறித்த விவரங்களை கேட்டறிந்து, பயனாளியிடம் திட்டத்தின் பயன்கள் குறித்து கலந்துரையாடினார். தொடர்ந்து, சட்டநாதபுரம் ஊராட்சியில் ஆற்றங்கரை தெருவில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கான்கிரீட் வீடு கட்டப்பட்டு வருவதை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு, பணிகளின் தரத்தினை ஆய்வு செய்து, பயனாளியுடன் கலந்துரையாடினார்.

அதேபோல், கான்கிரீட் வீடுகளை பொறுத்தவரை சிறு பழுதுபார்க்கும் பணிகளுக்கு ரூ.55 ஆயிரமும், மிகவும் சேதமடைந்துள்ள கான்கிரீட் வீடு பழுது பார்க்கும் பணிக்கு ரூ.1 இலட்சத்து 50 ஆயிரமும் பயனாளிகளுக்கு 2 தவணைகளாக வழங்கி பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் ஊரக வீடு; பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் 1665 பயனாளி



முதலமைச்சர் உத்தரவின்படி, கான்கிரீட் வீடுகள், ஓட்டு வீடுகள், சேதமடைந்துள்ளதை பழுது பார்க்கும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையின் ஊரக வீடுகள் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அதன்படி, ஓட்டு வீடுகள் பழுதுபார்ப்பு மற்றும் கான்கிரீட் வீடுகள் பழுதுபார்ப்பு என பிரிக்கப்பட்டு, ஓட்டு வீடுகளை பொறுத்தவரை சிறு பழுதுபார்ப்பு பணிகளுக்கு ரூ.32 ஆயிரமும், மிகவும் சேதமடைந்துள்ள ஓட்டு வீடு பழுதுபார்க்கும் பணிகளுக்கு ரூ.70 ஆயிரமும், கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களது குடியிருப்பு வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது. இதனை, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் 2030- ஆண்டிற்;குள் குடிசை இல்லா தமிழகம் உருவாக்கப்படும் என்ற தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் முதற்கட்டமாக 2024-24-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் கான்கிரீட்-வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் ஊரக மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 2500 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 5 வட்டாரங்களில் உட்பட்ட கிராமங்களில் பயனாளிகள் தயார் செய்யப்பட்டு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கான்கிரீட்-வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவர் 360 சதுர அடி பரப்பளவில் அரசின் ஒப்புதலுடன் கூடிய 4 வகையான வடிவமைப்பில் ஏதாவது ஒரு வடிவத்தில் பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப வீடு கட்டிக்கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் நிதி மூன்று கட்டங்களாக வழங்கப்படுகிறது.

சீர்காழி வட்டாரம், விளந்திடசமுத்திரம் கீழத் தெருவில் ஊரக வளர்ச்சி துறையின் ஊரக வீடுகள் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ராதிகா திட்டத்தின் பயன் குறித்து தெரிவித்ததாவது:எனது பெயர் ராதிகா. எனது கணவர் பெயர் செல்வம். அவர்; விவசாய கூலி வேலை செய்து வருகிறார். நான் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டாரம், விளந்திடசமுத்திரம் கீழத் தெருவில் வசித்து வருகிறேன். நாங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ஓட்டு வீட்டில் வசித்து வருகிறோம். கடந்த 5 ஆண்டுகளாக எங்களது ஓட்டு வீடு மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் கசிவு ஏற்பட்டு, மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, எனது வீட்டை ஊரக வீடுகள் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் தேர்வு செய்து எனக்கு பழுதுபார்ப்பு பணிக்கான ஆணை வழங்கினார்கள். இப்பழுது பார்ப்பு பணிக்கு ரூ.70 ஆயிரம் 2 தவணையாக வழங்கப்படும் என ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் தெரிவித்தார்கள். அதன்படி, இப்பழுது பார்ப்பு பணிகளை தொடங்கி எனது வீட்டின் மேற்கூறை ஓடுகளை மாற்றி அமைத்து மழைநீர் கசிவு ஏற்படாத வகையில் பூச்சு பணிகளை மேற்கொண்டு வருகிறோம். தற்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எங்களை போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு இதுபோன்ற தமிழ்நாடு அரசின் திட்டம் மிகவும் உதவியாக உள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். முன்னதாக, சீர்காழி வட்டாரத்தில் சட்டநாதபுரம் ஊராட்சி அண்ணாநகர் முதல் தெருவில் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகள் தொடர்பாக மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார்கள்.இவ்வாய்வின்போது, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ், சீர்காழி வட்டாட்சியர்.அருள்ஜோதி;, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமுருகன்;, சீர்காழி நகராட்சி ஆணையர் செல்வி.மஞ்சுளா ஆகியோர் உடன் இருந்தனர்.

**தொகுப்பு:-**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மயிலாடுதுறை மாவட்டம்**

# திருவாரூரில் அறநிலைய துறை ஊழியர்களுக்காக 2வது நாளாக நடைபெற்ற மருத்துவ முகாம்


## துணை ஆணையர் ராணி துவக்கி வைத்தார்



**திருவாரூர்,நவ.23-**

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் சேகர்பாபு மூலம் கோயில் ஊழியர்களுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி ஊதிய உயர்வு, ஓய்வூதிய உயர்வு போன்றவை மட்டுமின்றி சட்டமன்றத்தில் அறி விக் கப் பட் ட வாறு கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கான மருத்துவ முகாமினையும் நடத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி,திருவாரூர் தனியார் திருமண மண்டபம் ஒன்றில் நேற்று முன்தினம் நாகை மண்டலத்திற்குரிய திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்காக தஞ்சை மீனாட்சி மருத்துவமனை மூலம் நடைபெற்ற இந்த மருத்துவமுகாமினை இணை ஆணையர் குமரேசன் துவக்கிவைத்து மருத்துவபரிசோதனை செய்துகொண்டார். இந்நிலையில் 2வது நாளாக நேற்றும் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமினை நாகை மண்டல துணை ஆணையர் ராணி துவக்கி வைத்து ஊழியர்களுக்கு சலுவை கட்டணத்தில் தஞ்சை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கான மருத்துவ அட்டையினை ஊழியர்களுக்கு வழங்கினார்.உதவி ஆணையர் சொரிமுத்து முன்னிலை வகித்தார்.இதில் கோயில் செயல் அலுவலர்கள்,ஆய்வாளர்கள், அர்ச்சகர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் என ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ரத்த பரிசோதனை, இசிஜி, எக்ஸ்ரே உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை நாகை இணை ஆணையர் அலுவலக மேலாளர் சுரேஷ்,திருவாரூர் உதவி ஆணையர் அலுவலக மேலாளர் அனிஷ் மற்றும் செயல் அலுவலர்கள் அழகியமணாளன்,சண்முகராஜ் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

# கும்பகோணத்தில் தமிழக வெற்றி கழகத்தில் மாற்றுக்கட்சியினர் இணைந்தனர்



**கும்பகோணம்,நவ.23-**

கும்பகோணத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர். தமிழக வெற்றி கழகத்தின் தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் சார்பில் கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் இந்த கட்சியில் இணைந்தனர். மேலும் பல்வேறு கட்சிகளில் இருந்து தமிழக வெற்றி கழகத்தில் இணையும் நிகழ்வும் நடைபெற்றது.

தஞ்சாவூர்வடக்கு மாவட்டம் தாராசுரம் பிரபாகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பொறுப்பாளர் விஜய் சரவணன் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் கட்சி தொண்டர்கள் குடும்பத்துடன் ஏராளமான கலந்து கொண்டனர்.

# திட்டச்சேரி பேரூராட்சி பகுதியில் தேங்கிய மழைநீர் அகற்றும் பணி

## பேரூராட்சி செயல் அலுவலர் ஆய்வு



**நாகப்பட்டினம்,நவ.23-**

திருமருகல் ஒன்றியம் திட்டச்சேரி பேரூராட்சி பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர் அகற்றும் பணிகளை பேரூராட்சி செயல் அலுவலர் வெங்கடேசன் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். திட்டச்சேரி பேரூராட்சியில் வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் வடிகால் வாய்க்கால்களில் தூர்வாரும் பணி கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திட்டச்சேரி குளத்து மேட்டுத்தெரு பகுதியில் மழைநீர் சூழ்ந்து அடிக்கடி தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த மழை அப்பகுதியில் தேங்கி இருந்தது, இந்த மழை நீரை அகற்றும் பணியில் பேரூராட்சி ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். இதை பேரூராட்சி செயல் அலுவலர் வெங்கடேசன் நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு கூறினார். உடன் உதவியாளர் கோவிந்தராஜ், வரித்தண்டவர் மாதவன், அலுவலக உதவியாளர் அமானுல்லா மற்றும் ஊழியர்கள் உடன் இருந்தனர்.

**தலைகவசம் உயிர் கவசம்**


### அசல்/ நிலம் சொத்து ஆவணம் காணவில்லை

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மதுரை ரோடு, கல்லாத்துப்பட்டி, க.எண்.159/3 என்ற முகவரியில் வசித்து வரும் ஆரோக்கியம் மகன் A.ஜோசப் (ஆதார் எண்.7794 8328 9907) சுமார் 50 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில்,

மணப்பாறை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனது குடும்பத்திற்கு சொந்தமான அசையா சொத்தின் கிரையப் பத்திரம் எண்.137/1995 (தேதி 25.01.1995) ஆனது கடந்த 06.11.2024–ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் துவரங்குறிச்சி பஸ் ஸ்டாண்டு அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு துவரங்குறிச்சி பகுதியைச் சேர்ந்த எனது நண்பர் மணிகண்டன் என்பவரை பார்த்து சொத்து விற்பது சம்மந்தமாக விபரங்களை கேட்டு தெரிந்து கொண்ட பிறகு துவரங்குறிச்சி பஸ் ஸ்டாண்டு அருகே திரும்பி வரும்பொழுது நான் வைத்திருந்த மஞ்சள் பையில் இருந்த ஷெ எண்ணுள்ள அசல் கிரையப்பத்திரம் வரும்வழியில் தொலைந்துவிட்டது. இது சம்மந்தமாக கடந்த 14.11.2024–ம் தேதி இணையதளத்தில் புகார் கொடுத்து புகார் மனு எண். CHJ24552383–ல் நிலுவையில் உள்ளது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது 97885 34715 என்ற கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

A.ஜோசப், த/பெ.ஆரோக்கியம்,
க.எண்.159/3, கல்லாத்துப்பட்டி, மதுரை ரோடு,
மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம்.
செல்: 97885 34715



### தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
மயிலாடுதுறை மாவட்டம்.

**விலைப்புள்ளி அறிவிப்பு**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மயிலாடுதுறை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களால் 204–2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை மாவட்டம், மாவட்ட ஆட்சியரகம் 3–வது தளம் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்கள் அலுவலகம் அறை / கூட்ட அரங்கம் மற்றும் காணொளிக்காட்சி அறை போன்றவற்றில் உள் அலங்காரப் பணிகள் மற்றும் தளவாடப்பொருட்கள் அமைத்திட ரூ.45.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு விலைப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

1. ந.க.எண். 943/அ2/2024
2. மயிலாடுதுறை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களால் விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
3. விலைப்புள்ளி சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 29.11.2024 பிற்பகல் 3.00 மணி.

ஒம். மாவட்ட ஆட்சித் தலைவர்,
மயிலாடுதுறை மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.43/செ.ம.தொ.அ/மயிலாடுதுறை. நாள்: 22.11.2024.



மாண்புமிகு முசிறி கோட்டாட்சியர் நீதிமன்றம், முசிறி
அநிமு-அ 3 /5780/2024

C.ரம்யா,
D/o செட்டி,
சக்கிலியர் தெரு,
உப்பிலியபுரம். Po.,
துறையூர்.Tk., திருச்சி.Dt.
மனுதாரர்
/எதிராக/
திரு வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
துறையூர் எதிர் மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுவில் மனுதாரர் தனது பிறப்பு சான்றிதழ் கேட்டு முசிறி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். தான் கடந்த 03.04.1987-ம்தேதியன்று தனது பெற்றோர் செட்டி - சாலையம்மாள் தம்பதிக்கு மகளாக மேலே கண்ட முகவரியில் பிறந்ததாக கூறி பிறப்பு சான்றிதழ் கேட்டு மனுதாக்கல் செய்துள்ளதில் மேற்படி மனு குறித்து எவருக்கேனும் ஆட்சேபனைஇருப்பின் முசிறி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் மனு ஒருதலை பட்சமாக முடிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

C.ரம்யா,
மனுதாரர், உப்பிலியபுரம்



வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி
அ3/4892/2024

அ.குமார்,
த/பெ.அயினான்,
நாச்சம்பட்டி வடக்கு,
திண்ணக்கோணம், முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், முசிறி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது அப்பாயி "சின்னம்மாள் (எ) மலையம்மாள்" க/பெ.அயினான் என்பவர் கடந்த 11.05.2009–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

அ.குமார்,
மனுதாரர், முசிறி.



வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி
சி.ப.எண்.2925/2024

வடமலை,
த/பெ.கிருஷ்ணன்,
171/2, ஒக்கரை அஞ்சல்,
கிருஷ்ணாபுரம், துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், துறையூர்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "கிருஷ்ணன்" என்பவர் கடந்த 10.04.2017–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

கி.வடமலை,
மனுதாரர், துறையூர்.



வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் அவர்கள், மயிலாடுதுறை

சின்னப்பா, த/பெ.சம்மந்தம்,
பணையக்குடி,
பாளையபட்டுத் தெரு, கடக்கம்,
மயிலாடுதுறை.
– மனுதாரர்
வட்டாட்சியர், குத்தாலம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் "தனம்" க/பெ.சம்மந்தம், என்பவர் கடந்த 28.08.2014–ம் தேதியன்று மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை பதிவு செய்யப் படாததையடுத்து, தற்போது பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மாண்பமை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். அம்மனுவினை பொறுத்து எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்பாக ஆஜராகி தனது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

ச.சின்னப்பா,
மனுதாரர், மயிலாடுதுறை



சார் ஆட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 641/2024

S.மல்லிகா,
க/பெ.சுப்பையன்,
வடக்கு தெரு, சத்தியமங்கலம்,
பாபநாசம் தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.
– மனுதாரர்
மாண்புமிகு சார் ஆட்சியர் அவர்கள்,
சார்ஆட்சியர் அலுவலகம்,
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகள் "சாந்தி" க/பெ.சேகர் என்பவர் கடந்த 28.06.2005 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, கோவிந்தநாட்டுச்சேரி பட்டுக்குடி கிராமம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

S.மல்லிகா
மனுதாரர், கும்பகோணம்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

